அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் *: 33/2019*

எனது இலக்கம்*:* PubAd/AcSD/HB/61/SMA
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு *07.*

*2019.11.08*

சகல அமைச்சுக்களினதும் செயலார்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணத்தில் இலக்கம் *2137/66* மற்றும் *2019.08.22* ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் சேர்க்கப்பட்டுள்ள திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்</u>**

இலங்கை கணக்காளர் சேவையின் மூன்றாம் *(III)* ஆம் தரத்திலிருந்து இரண்டாம் *(II)* ஆம் தரத்துக்கும், இரண்டாம் *(II)* ஆம் தரத்திலிருந்து முதலாம் *(I)* ஆந் தரத்துக்கும் பதவியுயர்த்துவதற்கான குறைந்த பட்ச சேவைக் காலத்தை திருத்தியமைப்பதற்கு குறித்த ஏற்பாடுகளைச் சேர்த்து இலக்கம் *2137/66* மற்றும் *2019* ஆகஸ்ட் மாதம் *22* ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணத்தின் ஐந்தாம் சேவைப் பிரமாணத்தின் திருத்தத்திற்கமைய தற்போது சேவையில் கடமையாற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் அலுவலர்களின் தரத்திற்கான பதவியுயர்வுகள் பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றது.

*01.* மூன்றாம் *(III)* ஆம் தரத்திலிருந்து இரண்டாம் *(II)* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தல்.

*1.1)* *2019* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *26* ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அலுவலர்கள் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணத்தின் *10.1.1.1* இன் தொடரிலக்கம் *(vii)* இல் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் திறன் விருத்தி மட்டம் – *III* ஆம் பாடநெறியை முழுமைப்படுத்த வேண்டிய தேவைப்பாட்டை தவிர 10.1.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்த திகதி அல்லது *2019* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *26* ஆந் திகதி என்ற இரு தினங்களின் பின்னர் துவங்கும் திகதியிலிருந்து *II* ஆம் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

*1.2)* திருத்தியமைக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணத்தின் *09* இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் *01/2014* மற்றும் அதற்கு ஒத்திசைவான சுற்றறிக்கையினால் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தினுள் முழுமைப்படுத்திய அலுவலர்களை குறித்த

திகதியினுள் மற்றைய அரசகரும மொழித் தேவையினை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களாக கருதப்படுவார்கள்.

*1.3)* திருத்தியமைக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணத்தின் *09* இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் *01/2014* மற்றும் அதற்கு ஒத்திசைவான சுற்றறிக்கைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தினுள் முழுமைப்படுத்தாத அலுவலர்கள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி உள்ளடங்கலாக இச் சுற்றறிக்கையின் *1.1* இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்யப்படும் திகதியிலிருந்து *II* ஆம் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

*2.* இரண்டாம் *(II)* தரத்திலிருந்து முதலாம் தரத்துக்கு *(I)* பதவியுயர்த்தல்.

*2.1* சேவைப் பிரமாணத்தின் ஐந்தாம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்தப்படும் *2019* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *26* ஆந் திகதியிலிருந்து *II* ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கு மற்றும் *III* ஆந் தரத்தில் ஆறு *(06)* வருடங்களுக்கு மேலதிகமான முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு

*(அ) II* ஆந் தரத்திலிருந்து *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக அடைந்திருக்க வேண்டியுள்ள இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணத்தின் *10.2.1.1* இன் தொடரிலக்கம் *V* இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள *5* ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் அல்லது தகைமையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஐந்து *(05)* வருட கால அளவு சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளதோடு அச் சலுகைக் காலத்தினுள் *5* ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை முழுமைப்படுத்தியுள்ள அலுவலர்கள் இச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப *10.2.1.1* இன் கீழ் கூறப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

*(ஆ). II* ஆந் தரத்திலிருந்து *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக அடைந்திருக்க வேண்டிய *10.2.1.1* இன் தொடரிலக்கம் *ii* இன் கீழமைந்த இரண்டாம் வினைத்திறன் காண் தடை தாண்டலினை முழுமைப்படுத்துவதற்காக *II* ஆந் தரத்துக்கு பதவுயுயர்த்தப்படுள்ள திகதி முதல் மூன்று *(03)* வருட சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது என்பதோடு அச் சலுகைக் காலத்தினுள் குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படுள்ள ஏற்பாடுகளின் படி *10.2.1.1* இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

*2.2)* சேவைப் பிரமாணத்தின் ஐந்தாம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் *2019* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *26* ஆந் திகதிக்கு *II* ஆந் தரத்துடைய அலுவலர்களை *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தும் போது *10.2.1.1* இன் *(i)* மற்றும் *(iv)* இன் கீழ் குறிப்பிட்டு தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கருத்திற் கொள்ளப்படும்.

*(அ) II* ஆந் தரத்தில் இரண்டு *(02)* வருடம் முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் மற்றும் *II* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தியதன் பின்னர் சம்பள ஏற்றங்கள் இரண்டினை *(02)* உழைத்திருத்தல்.

*(ஆ)* அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறை ஒழுங்கிற்கு ஏற்ப *II* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் பதவியுயர்த்தப்படும் திகதிக்கு முன்னரான இரண்டு *(02)* வருடங்களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர் செயலாற்றுகையை எடுத்துக் காட்டுதல்.

*2.3)* சேவைப் பிரமாணத்தின் ஐந்தாம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் *2019* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *26* ஆந் திகதிக்கு *III* ஆந் தரத்தில் ஆறு *(06)* வருடங்களுக்கு மேலதிக முனைப்புடனானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இச் சுற்றறிக்கையின் *1.1* இல் குறிப்பிடப்படுள்ள ஏற்படுகளுக்கமைய *II* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்களை *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தும் போது *10.2.1.1* இன் *(i)* மற்றும் *(iv)* இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கருத்திற் கொள்ளப்படும்.

*(அ) III* மற்றும் *II* ஆந் தரங்களில் பன்னிரண்டு *(12)* வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதும் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் பதினொன்றினை *(11)* உழைத்திருத்தல்.

*(ஆ)* அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறை ஒழுங்கிற்கு ஏற்ப பதவியுயர்த்தப்படும் திகதிக்கு முன்னரான பன்னிரண்டு *(12)* வருடங்களினுள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர் செயலாற்றுகையை எடுத்துக் காட்டியிருத்தல்.

குறிப்பு

*2019* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *26* ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை கணக்காளர் சேவையின் *III* ஆந் தரத்தில் ஆறு *(06)* வருடங்களுக்கு மேலதிகமாக முனைப்புடனானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தினை முழுமைப்படுத்தியுள்ள இச் சுற்றறிக்கையின் *1.3* இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப *II* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்களை *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தும் போது அவ் அலுவலர்கள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்வதற்காக எடுக்கப்படும் மேலதிக காலத்துக்கு சமனான காலப் பகுதியில் அவ் அலுவலர்களின் *I* ஆந் தரத்துக்கு பதவியுயத்தப்படுவது தாமதப்படுத்தப்படும்.

*2.4) 2019* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *26* ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள இச் சுற்றறிக்கையின் தொடரிலக்கம் *I* இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய *II* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலகர்களை *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவதற்கு முன்னர் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணத்தின் *10.1.1.1* இன் தொடரிலக்கம் *(vii)* இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் திறன் விருத்தி மட்டம் – *III* ஆம் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*2.5) 2019* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *26* ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அலுவலர்களை *I* ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தும் போது திருத்தியமைக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணத்தின் *10.2.1.1* இன் தொடரிலக்கம் *(vi)* இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் திறன் விருத்தி மட்டம் – *II* ஆம் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருப்பதன் தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்படாது.

இச் சுற்றறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு ஏற்ப வெளியிடப்படும்.

ஒப்பம்./ ஜே.ஜே.ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ
மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு